
# தெரிந்த ஈரோடு தெரியாத செய்திகள்



செ.இராசு

# தெரிந்த ஈரோடு
# தெரியாத செய்திகள்


தொகுப்பாசிரியர்

புலவர் **செ.இராசு** எம்.ஏ., பிஎச்.டி.

ஈரோடு



வெளியீடு


**கொங்கு ஆய்வு மையம்**

ஈரோடு - 638 011.

# நூற்குறிப்பு

இந்நூல் ஈரோடு மாமரத்துப்பாளையம்
சக்தி மசாலா நிறுவனங்களின் உரிமையாளர்கள்
டாக்டர் **பி.சி. துரைசாமி**
டாக்டர் **சாந்தி துரைசாமி**
ஆகியோர் பொருட்கொடையால் வெளியிடப் பெறுகிறது.
அவர்கட்கு எங்கள் நன்றி உரியதாகுக.


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | தெரிந்த ஈரோடு தெரியாத செய்திகள் |
| நூல் பொருள் | : | நகர வரலாறு |
| ஆசிரியர் | : | புலவர் செ. இராசு |
| மொழி | : | தமிழ் |
| நூல் உரிமை | : | கொங்கு ஆய்வு மையத்திற்கு |
| பதிப்பு ஆண்டு | : | 2017 |
| நூலின் அளவு | : | 11 செ.மீ. × 18 செ.மீ. |
| பக்கங்கள் | : | 136 |
| அச்சு எழுத்து | : | 11 புள்ளி |
| விலை | : | ரூ. 130 /- |
| நூல் கிடைக்குமிடம் | : | கொங்கு ஆய்வு மையம்<br>58/2, பாலக்காட்டுத் தோட்டம்<br>புதிய ஆசிரியர் குடியிருப்பு வழி<br>ஈரோடு - 638 011.<br>போன் : 0424-2262664<br>செல் / 97900 38380, 95009 38384 |
| நூல் & அட்டை வடிவமைப்பு | : | வாழ்க வளமுடன் ஆப்செட் பிரிண்டர்ஸ்<br>பிரைவேட் லிமிடெட்,<br>29 நாச்சியப்பா வீதி,<br>ஈரோடு - 638 001.<br>போன் : 0424-2258511, 22 |



கைக்கோளர், சேடர், பறையர் எனச் சுமார் 2000 நெசவாளர்கள் இந்த வட்டாரத்தில் உள்ளனர்.


பவானியிலிருந்து ஈரோடு வழியே வரும் வாய்க்கால் மிகவும் நேர்த்தியான வேலைப்பாடு. ஈரோட்டில் ஒரு ஓடையைக் கடப்பதற்காக ஒரு பாலம்வழியே வாய்க்கால் செல்கிறது. நல்ல செல்வமும் செல்வாக்கும் மிக்க காலிங்கராயர் என்ற வேளாளர் இந்த வாய்க்காலை வெட்டினார். இது சுமார் 400 ஆண்டுகட்கு முன்பு நடந்தது. தான் முடித்த மிகப் பெரிய வேலைக்கு அவர் எந்தவிதமான நன்றிக் கடனையும் ஏற்றுக் கொள்ளவில்லை.

## 1800 நவம்பர் 8

இன்றும் ஈரோட்டிலேயே தங்கித் தாசில்தாரிடம் பல செய்திகளைக் கேட்டறிந்தேன். ஈரோடு தாசில்தார் நல்ல புத்திசாலிப் பிராமணர்.

மிளகு என்ற நெல்ரகம் 8 மாதப் பயிர் நெல். விதைக்கவும் படுகிறது. ஒரு ஆண்டில் இதற்கப்புறம் வேறு பயிர் கிடையாது. இரண்டு போகம் விளையும் நிலங்களும் உள்ளன. 5 மாதப் பயிர் அன்னதானம் சம்பா, தேவராயன் சம்பா, செந்தலை போன்ற நெல் ரகம் பயிரிடப்படுகிறது.

திப்புவின் ஆட்சியில் தென்னையும், வெற்றிலையும் இருந்து அழிந்துவிட்டன. இப்போது 20000 தென்னையும் 100000 பனைமரமும் வைக்க ஏற்பாடாகியுள்ளது. வெட்டவெளித் தோற்றத்தை மாற்றவும், வீடுகள் கட்டவும் இவை பயன்படும்.



காலிங்கராயன் அணை

3. பூந்துறை நாட்டார் வெள்ளோட்டில் கூடி திண்டல் கிராமத்தைக் கொடை கொடுத்த கல்வெட்டு. மூன்றாம் வீரவல்லாளன் காலம்.

கி.பி. 1341

4. உம்மத்தூர் தலைவன் வீரராய தாவக்க மாரைய நாயக்க உடையார் பாலமேடு குறவன் கரையில் 20 மாநிலம் கொடை கொடுத்த கல்வெட்டு.

கி.பி.1504

5. ஒக்கிலியர்களில்ஆதியப்ப கவுண்டர், மல்லைய கவுண்டர் ஆகியோர் சங்கராந்தி பூசைக்காக குருவராயன்பொன் 15 கொடை கொடுத்த கல்வெட்டு. கிருஷ்ணதேவராயர் காலம்.

கி.பி.1527

6. மதுரை வீரப்ப நாயக்கர் தொண்டீசுவரர், பள்ளி கொண்ட பெருமாள் இருவருக்கும் கொடை நிலம்அளித்தார். விசயநகரம் வீரவெங்கடபதிராயர் காலம்.

கி.பி. 1589


## கொங்கலம்மன் கோயில்

1. வீரபாண்டியன் காலத்தில்பூந்துறை நாட்டார் ஈரோடு கொங்கலம்மைக்கு பூந்தோட்டம் என்ற பகுதியில் நன்செய், புன்செய்நிலம் அளித்த கல்வெட்டு.

கி.பி.13 ஆம் நூற்றாண்டு

2. பெண்ணாலி கோத்திரம் தாமோதரம் பிள்ளை மக்கள் செலம்பண பிள்ளை, ரங்கையம் பிள்ளை, சிதம்பரம்பிள்ளை மூவரும் தூரிக்கல், கருடகம்பம், கொறடு அமைத்த கல்வெட்டு.

கி.பி.1815



ஈரோடு கொங்கலம்மன் கோயிலில் வீரபாண்டியன் கல்வெட்டு
(கி.பி.13 ஆம் நூற்றாண்டு)

# 62 17ஆம் நூற்றாண்டு நாடகம்



அய்யனாரப்பன் கோயில்

ஈரோட்டின் கிழக்கு எல்லையில் காலிங்கராயன் கால்வாயின் மேல்புறம் அய்யனாரப்பன் கோயில் உள்ளது. தமிழ் நாட்டிலும், குறிப்பாகக் கொங்கு நாட்டிலும் அய்யனார் வழிபாடு சிறப்பாக விளங்கியது. ஈரோடு அரசு அருங்காட்சியகத்திலும், கலைமகள் பெண்கள் மேல் நிலைப்பள்ளி அருங்காட்சியகத்திலும் பல அய்யனார் சிலைகள் உள்ளன.

உழவுத் தொழிலை அடிப்படையாக வைத்து எழுதப்பட்ட உழவர் இலக்கியம் பள்ளு நூல்களாகும். ஈரோடு அய்யனாரப்பன் மீது புலவர் முத்துக் கருப்பன் என்பவர் ஒரு பள்ளு நாடக நூல் இயற்றினார்.

முத்துக்கருப்பன் இயற்றிய அய்யனாரப்பன் பள்ளு நாடக நூலை சஞ்சீவி என்பவர் ஆடிக்காட்டி மக்களை மகிழ்வித்தாராம். அந்நாடகம் காலிங்கராயன் கரையில் உள்ள அய்யனாரப்பன் கோயிலில் தான் நடை பெற்றிருக்க வேண்டும் என்ற குறிப்பு அப்பாடல் பகுதியில் உள்ளது.

'காலிங்க ராயர் கடாட்சத்து னாலே
சாலவே இந்தத் தரணியில் வாழும்
குடியான வர்கள் கூடிய சபையில்
வடிவான பள்ளை வந்துமே ஆடிய
சஞ்சீவி தனக்குச் சதுருடன் செம்பொன்' கொடுத்தனராம்.

புலவர் வே.ரா. தெய்வசிகாமணிக்கவுண்டர் தொகுப்பில் உள்ள இப்பள்ளு ஓலைச்சுவடி பேரூர் சாந்தலிங்கர் திருமடத்தில் உள்ளது. இன்னும் அச்சாகவில்லை.

## 73 மங்கல கிரியும் மங்கலமும்

அக்ரகாரம் வழியாகப் பவானி செல்லும் வழியில் 'பெருமாள் மலை' இருப்பது தெரியும். பெருமாள் மலையின் பழைய பெயர் 'மங்கலகிரி'. மங்கலகிரியின் கிழக்கே காலிங்கராயன் கால்வாய் - காவேரி இடையில் 'மங்கலம்' என்ற பழைய ஊர் இருந்தது. பூந்துறை நாட்டு 32 பழம் பெரும் ஊர்களில் மங்கலம் 22ஆவது ஊர். ஊர்த்தொகைப் பாடலிலும் இடம் பெற்றுள்ளது. மங்கலம் ஊருக்கு உரிய மலையாதலின் மங்கலகிரிப் பெருமாள் எனப்பட்டார். அங்கிருந்த மரகதவல்லி சமேத பிறப்பீசுவரர் கோயில்இன்று இல்லை. பழைய ஊரில் வாழ்ந்தவர்கள் கொங்கு வேளாளரில் கண்ணன் குலத்தார். இவர்களே ஊர் உரிமையுடைய காணியாளர்கள்.

அழிந்த சிவாலயத்தின் கல்வெட்டுக் கற்கள் பல ஈரோடு கலைமகள் பெண்கள் பள்ளி அருங்காட்சியகத்தில் உள்ளன. அதில் 'காலிங்கராயன்' பெயர் பொறித்த கல்வெட்டுகள் உள்ளன. ஈரோடு அய்யனாரப்பன் பள்ளு நூல்,

'மங்கலகிரி வாசர்க்கு நேசமாய்ப்
பொங்கல் வையுங்கள்'

என்று கூறுகிறது.

## 74 காலப்பள்ளி ஆன லக்காபுரம்

லக்காபுரத்தின் பழம் பெயர்தான் காலப்பள்ளி. காலப்பள்ளி 16 ஆம் நூற்றாண்டில் சின்னியம்பாளையம் காவிரிக்கரையில் இருந்து இன்று முற்றிலும் அழிந்துபோன சாத்தம்பூரின் இணை ஊர்களில் ஒன்றாக இருந்தது. உம்மத்தூர்த் தலைவன் வீரசிக்கராயன் காலத்தில் கி.பி.1527 ஆம் வருடம் பூந்துறை நாட்டார் ஈரோட்டில் கூடி ஈரோடு திருத்தொண்டீசுவரர் கோயிலுக்கும் பள்ளிகொண்ட பெருமாள் கோயிலுக்கும் லக்காபுரத்தைக் கொடையாகக் கொடுத்தனர்.

அழிந்த நிலையில் இருந்த ஈரோடு பெருமாள் கோயில் வாத்திய மண்டபத்தைப் புதுப்பித்தவர் லக்காபுரம் முத்துக்குமாரக் கவுண்டர்.

லக்காபுரம் வேளாளர் ஆதி குலத்தார் பெருமாள் கோயில் விஜயதசமி விழா அம்பு சேர்வையில் பங்கேற்பதும், லக்காபுரம் வேளாளர் ஆவகுலத்தார் தொண்டீசுவரர் கோயிலில் ஐப்பசி பவுர்ணமியில் அன்னாபிஷேகம் செய்து வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

“சாத்தம்பூரில் காலப்பள்ளி ஆன லக்காபுரம்” என்பது கல்வெட்டு. ஒரு நாவிதர் சமூக ஆவணம் லக்காபுரத்தை “இலக்கிய புரம்” என்று கூறுகிறது.


# 78 காவிரிக் குடிநீர்




டி. சீனிவாச முதலியார்

தந்தை பெரியார் 1917 முதல் 1920வரை ஈரோடு நகராட்சி மன்றத் தலைவரா இருந்தார். அவரது பதவிக் காலத்தில் 26.5.1919 அன்று ஈரோடு மக்களுக்குக் காவிரி நீர் வழங்கப்பட்டது. தொடங்கி வைத்தவர் திவான் பகதூர் பி. இராஜகோபாலாச் சாரியார் (C.I.E. MEMBER IN COUNCIL FORT St. GEORGE, MADRAS). சிலர் இவரை ராஜாஜி என்றே தவறாக எழுதுகின்றனர்.

முன்பு காலிங்கராயன் வாய்க்காலிலிருந்துதான் ஈரோடு நகருக்குக் குடிநீர் வழங்க பட்டது. காலிங்கராயன் கால்வாய்த் தண்ணீர் மே 1 முதல் ஜூன் 15 வரை நிறுத்தப்படு எனவே அச்சமயம் உள்ளிட்டு ஆண்டு முழுவதும் குடிநீர் வழங்கக் காவிரி நீர் பயன்படுத்த வேண்டும் என்று 1911ல் நகராட்சிமன்றத் தலைவராக இருந்த டி. சீனிவாச முதலியார் அரசுக்குக் கடிதம் எழுதினார். இந்தத் திட்டம் குறித்து ஆய்வு செய்ய அரசு உதவி சுகாதார




ஈரோடு குடிநீர் மேல் நிலைத் தொட்டி
கால்கோள் (26.9.1914)




குடிநீர் தொட்டி திறப்பு விழா (26.5.1919)

# 80 காலிங்கராயன் அமைத்த 'தாவுதுறை'க் குழு




காலிங்கராயன்

காலிங்கராயன் அணைகட்டவும் வாய்க்கால் வெட்டவும் ஒரு நிபுணர் குழு அமைத்தார். இரண்டிற்கும் சரியான இடம் 'தாவுதுறை' பார்ப்பது அதன் பணி. இவ்விபரம் 'காலிங்கராயன் அணைப் பட்டயம்' கூறுகிறது.

கனகபுரத்து நஞ்சையன் மகன் லிங்கையன் வானியாற்றில் அணை கட்ட வேணு மென்று தாவுதுறை பார்த்துச் சொல்ல குழு அமைக்கப்பட்டது. கீழ்க்கண்டவர்கள் குழுவில் இடம் பெற்றிருந்தனர்.

1. தென்கரை நாட்டுச் செட்டி வேணாவுடையான்
2. நரையனூர் நாட்டு தாராபுரம் காசிப கோத்திரம் பிரமியண பிள்ளை
3. பொங்கலூர் நாட்டு தெய்வசிகாமணி
4. பூந்துறை நாட்டு வாரணவாசி
5. ஆறுநாட்டு மசக்காளி வேலன்
6. குறுப்புநாட்டு ரகுநாதன்
7. ஒடுவங்கநாட்டு முத்து வேலன்
8. நல்லுருக்கா நாட்டு வாணவராயன்
9. வாரக்கநாட்டு பொங்கியண்ணன்
10. காவுலுக்கா நாட்டு உடையணன்



காலிங்கராயன் சிலை

இக்குழுவில் காலிங்கராயன் தந்தை நஞ்சையனும், காலிங்கராயன் பிரதிநிதியாக எண்ணமங்கலம் காளியண்ண னும் இடம் பெற்றிருந்தனர். குழுவின் தலைவர் கங்கய நாட்டுக் காடையூர் சரவண காங்கேயன். இக்குழு கூடும் இடம் ஈரோடு கொங்கலம்மன் கோயில்.

81

# காலிங்கராயனுக்கு கொங்கலம்மன் தந்த அனுமதி

"தாவுதுறைக்குழு"வினர் ஆய்வுப் பணிகள் முடித்த பின்னர் கொங்கு 24 நாட்டாரும் கூடி காலிங்கராயன் பணிக்குச் சம்மதம் தந்தனர். பின்னர் செட்டி, வர்த்தகர், பல பட்டறைச் சாதிகளும் சம்மதித்தனர். இறுதியில் காலிங்கராயனுக்கு ஈரோடு கொங்கலம்மன் சன்னதியில் பணிகட்கு அனுமதிப் பட்டயம் வழங்கத் தீர்மானம் செய்து கொங்கலம்மன் சன்னதியில் கூடினர். பத்தாயிரம் பழங்களால் வழிபாடு செய்து காலிங்கராயன் பிரதிநிதி எண்ண மங்கலம் காளியண்ணனுக்குப் பட்டயம் கொடுக்க முற்படும் போது பொங்கலூர் தெய்வசிகாமணி எனக்கே பட்டயம் வேண்டும் என்று குரல் கொடுத்தார். நடந்தது என்ன? காலிங்கராயன் அணைப்பட்டயம் பின் வருமாறு கூறுகிறது.

"இருபத்துநாலு நாட்டாருங் கூடி செட்டி வற்த்தகற்களும் பலபட்டரைசாதிக்கும் சம்மதிச்சு காளியண்ணனுக்கு சாதினப் பட்டயம் நேமுகம் செயிது குடுக்க வேணுமென்று சகலமான செனங்களும் அனைவரும் கூடி ஈரோட்டு கொங்கிலியம்மன் சன்னதிக்கி போயி அம்மனுக்கு பதினாயிரம் பளம் நெபேதினம் செயித பின்பு காளியணனுக்கு சாதின பட்டயங் குடுத்தபோது பொங்கலூரு நாட்டு தெய்வசிகாமணி வந்து யிந்த பட்டயம்யெனக்கு சேறவேணுமென்று மரித்து சொன்னான்.

நல்லது யென தாறாபுரம் பிறமியணன் சொல்லும் வசனம், வுங்கள் ரெண்டு பேற் படிக்கி திருவுளச் சீட்டெழுதி அம்மன் பாதத்திலே வைத்து ரெண்டு பேரையும் பார்த்துச் சுனையிலே ஸ்தானம் செயிது அம்மனை பிறதஷ்ஷனம் வலமாயி வந்து தெய்வசிகாமணி நான் முன்னமே யெடுப்பேனென்று சமத்துக் கூரினான். சறவண காங்கயன் சொல்லும் வசனம். நீ போயி வுன்பேற் படிக்கி இருந்த சீட்டு வுன் கையிக்கி வந்தால் வுனக்கே நேமுகம் செயிது முடிக்குரோமென்று சொன்னார்கள்.

அப்போ கோவிலுக்குள்ளே அடியெடுத்து வயிக்கவும் அம்மன் மடிப் பிடவையில் இருந்து ஒரு நீற் சற்ப்பம் வடமுகாக்கினி போலும் சீரி கோவித்து யெளுந்தது கண்டு பயந்து நடுநடுங்கி பிறண்டுருண்டு பின்னிட்டு வந்து சோபந்தட்டி மயங்கி விளுந்தவனெ காளியணன் யெடுத்து மாற்போடே அணைத்து நெஞ்செ தட்டி அம்மனைத் தியானிச்சி தண்ணீரெ முகத்துக் கெறச்சி பயத்தை தீற்து அவன் மனசெ தகிறியம் பண்ணினான்.

அதன் பிற்ப்பாடு பத்துபேறுங்கூடி காளியணனெ உன் பேறுபடிக்கி சீட்டெயெடுத்துவறச் சொன்னார்கள். அதின் பிறகு சுனையிலே ஸ்தானம் செயிது அம்மனை வலப்பிறதஷ் ஷனமாயி சுத்திவந்து கோவிலுக்குள்ளே பூதவும் நாக சற்ப்பம் கோபமாறி மாயமாயி போயிவிட்டுது. அதின் பிறகு அம்மன் பாதத்திலேயிருந்த திருவுளச் சீட்டெடுத்துவந்து பத்துபேருங் காணத்தக்கதாக சபையிலே வயித்தான். பத்துபேறும் சீட்டெ பாற்துவுன் பேற்படிக்கி சீட்டு வந்தது" என்று கூறி எண்ணமங்கலம் காளியண்ணனிடம் பட்டயம் தந்தனர். காலிங்கராயன் பணி தொடங்கி 12 ஆண்டுகளில் முடித்தார். கி.பி.1282 தை 5 ஆம் நாள் பணி முற்றுப் பெற்றது.

82


# காரைவாய்க்காலும் கோணவாய்க்காலும்

ஈரோடு நகரில் ஓடும் பெரும்பள்ளம் காலிங்கராயன் கால்வாய்க்குக் கீழே செல்லுகிறது. மேலே கால்வாய் பாலத்தின் மேல்காரை பூசப்பட்டுத் தண்ணீர் செல்லுகிறது. பாலத்தின் பகுதியில் காரை பூசப்பட்ட பகுதியில் வாய்க்கால் ஓடுவதால் இப்பகுதி மக்கள் 'காரை வாய்க்கால்' என்பர்.

காலிங்கராயன் அணை கடல்மட்டம் 534 அடி உயரம். காலிங்கராயன் வாய்க்கால் நொய்யலில் கலக்கும் இடமான ஆவுடையா பாறை கடல்மட்டம் 412.48 அடி. இடையின் நேரான தூரம் 32 மைல். மைலுக்கு 3.79 ஆடி தாழ்வு. நேராகக் கால்வாய் வெட்டியிருந்தால் தண்ணீர் விரைந்து ஓடி நொய்யலில் கலந்துவிடும்.

மேடு கண்ட இடம் எல்லாம் கால்வாய் வளைத்து வெட்டப்பட்டு 32 மைல் தூரத்தில் 56½மைல் பயணம் செல்லுகிறது.

பல இடங்களில் வாய்க்கால் வளைந்து வளைந்து கோணலாகச் செல்லுவதால் மக்கள் 'கோண வாய்க்கால்' என்பர். இதனால் சிலர் பாம்பு காட்டிய வழியில் காலிங்கராயன் வாய்க்கால் வெட்டினார் என்பர்.



காரை வாய்க்கால்



வளம் சேர்க்கும் கோண வாய்க்கால்

காலிங்கராயன் வம்சாவளி ஆவணத்தில் வெள்ளோடு சர்வலிங்கேசுவரன் கனவில் கிழ பிராமணன் வடிவில் வந்து சர்ப்பம் போகிற வழியில் வாய்க்கால் வெட்டு என்று சொன்னதாகவும், அவ்வாறே பாம்பு போன வழியை அடையாளம் இட்டு வாய்க்கால் வெட்டிய தாகவும் கூறப்படுகிறது.

அதே போல் பவானியாற்றில் சர்ப்பம் படுத்துக் கொண்ட இடத்தில் அணை கட்டியதாகவும் கூறுகிறது. அதனால்தான் பாம்புக்கும் சிலை வடித்து வணங்கப்பட்டதாம். அணையில் ஒரு மேடையில் பாம்புச் சிற்பம் இன்றும் உள்ளது.

# 83 13 ஆம் நூற்றாண்டுப் பாலம்



காலிங்கராயன் கால்வாய்ப் பாலம் (1282)

இந்தியாவின் தொன்மையான பாலங்கள் பற்றிய நூல் பிரான்சு நாட்டில் வெளியிடப் பட்டுள்ளது. அந்நூலில் நமது ஈரோட்டுப் பாலம் படமும் விபரமும் வெளி வந்துள்ளது.

கி.பி.13 ஆம் நூற்றாண்டில் வெள்ளோடு கனகபுரத்தில் வாழ்ந்த கொங்கு வேளாளரில் சாத்தந்தை குல நஞ்சைய கவுண்டர் மகன் லிங்கய்யன் பாண்டியன் உயர் அதிகாரி ஆனான். அமைச்சர் பொறுப்பில் இருந்த அவன் 'காலிங்கராயன்' என்ற சிறப்புப் பெயரைப் பெற்றான்.

மக்கள் வாழும் பொருட்டு பவானியாற்றைத்தடுத்து அணை கட்டி பவானி முதல் கொடுமுடி ஆவுடையாபாறை வரை வாய்க்காலும் வெட்டினான்.

ஈரோடு நகரில் உள்ள பெரும்பள்ளத்தைக் காலிங்கராயன் கால்வாய் கடக்கும் போது கால்வாய் மேலேயும், பெரும்பள்ளம் கீழேயும் செல்லுமாறு ஒரு பாலம் கட்டினான். தனிப்பாடல் ஒன்று

"அகாண்டமாய் வருகின்ற பெரும்பள்ளம் தன்னிலே ஆறுபோல் பெருகி வரவும்

ஆறுக்கு ஆறு செவுதி நாலுக்கு நால்
திறனை அதுவுமொரு பாலமாக"

என்று கூறுகிறது. நீளம், அகலத்திற்கு செவுதி, திறனை என்ற சொல் பயின்று வருகிறது. எந்த அகராதியிலும் இந்தச் சொல் இடம் பெறவில்லை.

பிரான்ஸ் நாட்டு தொல்லியல் நிபுணர் ஜீன் டிலோக் எழுதிய இந்தியாவின் தொன்மைப் பாலங்கள் என்ற நூலில் தான் பாலத்தின் படமும் செய்தியும் இடம் பெற்றுள்ளது.



13 ஆம் நூற்றாண்டுப் பாலம் (அடிப்பகுதி

## 84 உரிமை பெற்ற மக்கள்

பூந்துறை நாட்டில் ஈரோடு உட்பட 32 ஊர்களிலும் வாழும் கம்மாளர்குலப் பெருமக்கள் தங்கள் கால்களுக்குப் பாதரட்சை கோத்துக்கொள்ளவும், நன்மை தின்மைக்கு இரட்டைச் சங்கு ஊதிப் பேரிகை உள்ளிட்டன கொட்டுவித்துக் கொள்ளவும், தங்கள் வீடுகளுக்குச் சாந்து (காறை) பூசிக் கொள்ளவும் உரிமைகள் பெற்றனர். இதனால் இதுவரை அவர்கட்கு இந்த உரிமைகள் மறுக்கப்பட்டிருந்தன என்பது தெரிகிறது.

கோனேரின்மை கொண்டான் என்ற அரசனின் 15 ஆம் ஆண்டில் ஆடி மாதம் முதல் காலிங்கராயன் இந்த உரிமைகளை அளித்துள்ளான். கொங்கு மண்டல சதகமும், வரலாற்று ஆசிரியர்களும் இந்த உரிமைகளைச் சோழன் அளித்தான் என்று கூறினாலும் கல்வெட்டு பாண்டியர் காலம் என்கிறது. மேற்கண்ட உரிமைகள் ஏன் மறுக்கப்பட்டன.

கண்ணகிக்கு ஊறு விளைவித்த பொற்கொல்லனால் இந்தச் சமுதாயம் மேற்கண்ட உரிமைகளை இழந்திருக்க வேண்டும் என்று கோவை கிழார் கூறுகிறார். அண்ணன்மார் வரலாற்றில் மரநாழியைக் கொடுத்துப் பொன் நாழி என ஏமாற்றிய செம்பகுல ஆசாரியின் செயலால் இச்சமூகம் சில உரிமைகளை இழந்திருக்கக் கூடும். காலிங்கராயன் கால்வாய் வெட்ட உதவியதால் இந்த உரிமைகளைக் கம்மாளர்கள் காலிங்கராயன் மூலமாக மீண்டும் பெற்றனர்.

## 85 பாம்புக் கோயில்

விநாயகர் கோயில்கள் உட்பட பல கோயில்களில் பாம்பு உருவங்கள் பல இருப்பதைப் பார்க்கலாம். இரட்டைப் பாம்பு உருவங்களும் உள்ளன. சைவ- வைணவ மரபு இரண்டிற்கும் இது பொது. பாம்பு உருவங்களின் மேல் பகுதியில் சைவர் சிவலிங்கம் உருவம் பொறிப்பர். வைணவர்கள் காளிங்க நர்த்தனம் உருவம் பொறிப்பர்.

ஈரோட்டில் காரைவாய்க்கால் பகுதியில் பாம்புக்குத் தனிக்கோயில் உள்ளது. வாய்க்கால் அருகில் கிழக்கு நோக்கி அக்கோயில் உள்ளது. தனிப்பாம்புச் சிற்பமாக இல்லாமல் பாறையில் சுமார் 3 மீட்டர் நீளத்துக்குப் பாம்பு உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. வழிபாட்டில் அபிஷேக நீர் பாம்பின் வால் பகுதியில் உள்ள துளை மூலம் காலிங்கராயன் வாய்க்காலில் சேரும் வண்ணம் அமைப்பு உள்ளது.

சுமார் 40 ஆண்டுகட்கு முன் அக்கோயில் பூசாரி திருவேங்கட ராமசாமி என்பவரைக் கேட்டபோது இக்கோயிலைக் கட்டியவர்கள் ஆசாரிகள் என்றும், பல பகுதி ஆசாரிகள் வழிபடவருவர் என்றும் கூறினார். தென்புறம் உள்ள மண்டபமும் ஆசாரிகட்கு உரியது என்று கூறினார்.

காலிங்கராயனால் உரிமை பெற்ற ஆசாரிமார்கள் நன்றிக் கடனாக இக்கோயிலைக் கட்டியிருக்கலாம்.

# 86 தெய்வமான காலிங்கராயன்

செயற்கரிய செயல் செய்தவர்கட்குச் சிலை வைப்பது மட்டுமல்ல அவர்களைத் தெய்வமாகவும் வணங்கினர்.

வாய்க்கால் மூலம் வரலாறு கண்ட காலிங்கராயனை அணையில் சிலை வடித்து வணங்கினர் என்று ஆவணம் கூறுகிறது.

"காலிங்கக் கவுண்டன் கட்டியிருக்கப்பட்ட அணையிலே கவுண்டனையும் (வழிகாட்டிய) சர்ப்பத்தையும் சிலா பிரதிமை ரூபமாகக் கல்வெட்டி வச்சு சிலாசாசனமும் எழுதியிருக்கிறது. அந்த அணை போட்டு இருக்கப்பட்ட இடத்தில் குடிகள் பரம்பரையாய் வருஷப் பிரதியும் உற்சவம் பண்ணிக்கொண்டு வருகிறது. பூசை நைவேத்தியம் பண்ணிக் கொண்டு வந்தால் வெள்ளம் வந்து வெள்ளாமை விளஞ்சு கொண்டு வருகிறது" என்பது ஆவணப் பகுதியாகும்.

## ஈரோட்டிலும் கோயில்

ஈரோடு அய்யனாரப்பன் பள்ளு இலக்கியத்தில் ஈரோட்டில் உள்ள எல்லாக் கோயில் கட்கும் பள்ளர்கள் காணிக்கை கொடுத்து வழிபடுகின்றனர். ஈரோட்டில் இருந்த காலிங்க ராயன் கோயிலிலும் வழிபாடு செய்கின்றனர்.

பள்ளர் கூற்றாக

'கங்கை கோத்திரம் காலிங்க ராயர்க்கு
கண்ட சரமும் உத்தொண்டியும் சாற்றுங்கள்'

என்ற தொடர் வருகிறது.

கவுண்டச்சிபாளையம் பாலமடையம்மன் கோயில், வெள்ளோடு சர்வலிங்கேசுவரன் கோயில், இராசா சுவாமி கோயில் போன்ற இடங்களில் காலிங்கராயன் உருவச்சிலை என்று எண்ணத்தக்க சிலைகள் உள்ளன.

## ஆங்கில நூலின் கருத்து

காலிங்கராயன் பரம்பரையில் வந்தவர்கள் மட்டுல்ல, கொங்கு நாட்டு வேளாளர்கள் அனைவரும் காலிங்கராயனையும் வழிகாட்டிய பாம்பையும் தெய்வமாகவே வழிபட்டனர் என்பதை 'இந்தியாவின் ஆளுந்தலைவர்களும் பெருமக்களும் நிலக்கிழார்களும்' என்னும் ஆங்கில வரலாற்று நூல் கூறுகிறது.

"Stone statues of Kalingarayar and the serpent were placed near the anicut, and festivals and pujas were performed by his descendants and other ryots' என்பது ஆங்கில நூல் பகுதியாகும்.

காலிங்கராயன் அணையில் இன்று காலிங்கராயன் உருவச்சிலை இல்லை. பாம்புச் சிலை மட்டும் உள்ளது.


| | | |
|---|---|---|
| 15.. எஸ்.கே.எஸ். காதர் சாயபு | ரூ | 20-0-0 |
| 16. சேர்மன் ஆர்.கே. வெங்கிடுசாமி | ரூ | 20-0-0 |
| 17. அக்கிரகாரம் எம்.எஸ்.ஏ. முகமது அப்துல்லா | ரூ | 10-0-0 |
| 18. கே.எஸ். அப்துல் சமத் | ரூ | 10-0-0 |

ஊத்துக்குளி ஜமீன்தார் அகத்தூர் முத்துராமசாமிக் காலிங்கராயர் ரூ 25-0-0 அனுப்பி யிருந்தார்.

நடித்தவர்கள் : சி. என். அண்ணாத்துரை, ஈழத்து அடிகள், சி. வி. இராச கோபால், சி.வி.எம். அண்ணாமலை, எஸ்.வி. லிங்கம், டி.பி.எஸ். பொன்னப்பா ஆகியோர்

**செலவு விபரம்**

| | | |
|---|---|---|
| தமாஷாவரி | ரூ | 195-15-0 |
| முனிசிபல் லைசென்ஸ் | ரூ | 4-8-0 |
| ஸ்லைடு தயாரிப்பு | ரூ | 6-8-0 |
| வண்டி வாடகை | ரூ | 15-8-0 |
| மாலைகள் | ரூ | 7-12-0 |
| வாழைக்கம்பம், விளம்பரம் | ரூ | 10-0-0 |
| 2 நாள் சாப்பாடு, காபி | ரூ | 10-7-0 |
| சீன் செட்டிங், டிரஸ் | ரூ | 25-0-0 |
| விறகு | ரூ | 2-0-0 |






பெரியார் அண்ணா நினைவகம்

